சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்க

21.10.14
தினகரன் - கோவை

3 வருடமாக பட்டாசு வெடிக்காத பள்ளி மாணவர்கள்

கோவை, அக்.21: தீபாவளி என்றாலே பட்டாசுகளும், புத்தாடைகளும் தான் என் பார்கள். ஆனால், கோவை வடவள்ளி தெற்கு தொண் டாமுத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை சேர்ந்த மாணவர்கள் கடந்த மூன்று வருடங்களாக தீபாவளியை பட்டாசு வெடிக்காமல் கொண்டாடி வருகின்றனர். குருவிகள், பறவைகள், வனவிங்குகள் மற்றும் மாசு கட்டுபாட்டின் காரணமாக இவர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பள்ளி தற்போது இருக்கும் பகுதி கடந்த 2002ல் குப்பை மேடாக இருந்தது. ரமேஷ் என்ற ஆசி ரியரின் விடா முயற்சியால் பள்ளியாக மாற்றியமைக்கப் பட்டது. 15 வகுப்பறைகளை கொண்ட இப்பள்ளியில் 14 வகுப்பறைகளில் டைல்ஸ் பதிக்கப் பட்டுள்ளது. தனியார் பள்ளிகளுக்கு நிக ராகவும், மரங்கள் நிறைந்த சுற்றுச்சூழல் தளமாகவும் இப்பள்ளி காட்சியளிக் கிறது. இந்த பள்ளியில் தற்போது ஒன்றாம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை 186 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இவர்கள் சுற்றுச்சூழல் குறித்து பல்வேறு விழிப்பு ணர்வுகளை ஏற்படுத்தி வரு கின்றனர். இப்பள்ளி மாண வர்கள் ஒவ்வொரு மாணவனின் பிறந்தநாளின் போதும் மரம் நடுவது, பிளாஸ்டிக் பொருட்களை வீட்டிலும், பள்ளியிலும் பயன்படுத்தாமல் இருப்பது, ஜூஸ் போன்றவற்றை குடிக்கும் போது கூட ஸ்ட்ரா பயன்படுத்தாமல் இருப்பது, வெயில் காலத்தின் போது வீட்டின் முன்பு பற வைகளுக்கு தண்ணீர் வைப்பது போன்ற செயல்களை தொடர்ந்து செய்து வருகின்றனர். மேலும், குருவிகள், பறவைகள், வனவிலங்குகள் நலன் கருதி தீபாவளி நாட்களில் பட்டாசு வெடிக் காமல் இருக்கிறார்கள். அருகில் உள்ளவர்களையும் பட்டாசு வெடிக்க வேண்டாம் என அறிவு றுத்தி வருகின்றனர். இது குறித்து பள்ளி மாணவி திரிஷலா நந்தினி கூறுகையில் "நான் இப்போது எட்டாம் வகுப்பு படித்து வருகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளாக நான் பட்டாசு வெடிப்பது இல்லை.

▶ கடந்த மூன்று வருடங்களாக தீபாவளியை பட்டாசு வெடிக் காமல் கொண்டாடி வரும் தெற்கு தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை சேர்ந்த மாணவர்கள்.

என் தந்தை மற்றும் குடும்பத்தினரையும் வெடிக்க விடுவதில்லை. இதனால், தீபாவளியின் போது புது துணி மட்டும் தான் எடுப்போம், பட்டாசு வாங்க மாட்டோம். நான் 5ம் வகுப்பு படிக்கும் போது யோகநாதன் என்பவர் எங்கள் பள்ளிக்கு வந்து சுற்றுசூழல் மாசுபடுவது குறித்து விளக்கம் அளித்தார். மேலும், பட்டாசு வெடிப் பதால் விலங்குகள் பயந் து விடும், பறவைகள் இறக்கும் நிலை ஏற்படும் என கூறினார். இதனால், பட்டாசு வெடிக்காமல் இருக்கிறோம். எங்கள் பள்ளியில் உள்ள குட்டி குழந்தைகளுக்கு வெடிக்க கூடாது என அறிவுறுத்தி யுள்ளோம்," என்றார். மாணவி சந்தியா கூறுகை யில் "பட்டாசு வெடிப் பதால் அசுத்தமான காற்று பரவி மூச்சு திணறல் ஏற்படு கிறது. சுற்றுச்சூழல் மாசு ஏற்படுகிறது. பறவைகள், வனவிலங்குள் பாதிக்கப்படு கிறது. இதனால் கடந்த மூன்று வருடமாக பட்டாசு வெடிக்காமல் தீபாவளியை கொண்டாடி வருகிறேன். இந்த வருடமும் கொண்டா டவுள்ளேன்," என்றார்.

பள்ளி ஆசிரியை தமிழ்ச் செல்வி கூறுகையில் "எங்கள் பள்ளி மாணவர்களுக்கு அதிகளவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி யுள்ளோம். அவர்களுக்கு முன்மாதிரியாக நாங்களும் பட்டாசு வெடிப்பது இல்லை. சின்ன குழந்தை களுக்கும் பட்டாசு மூலம் ஏற்படும் பாதிப்பு குறித்து தெரிவித்துள்ளோம். அவர் களும் அவர்கள் வீட்டில் பட்டாசு வெடிப்பது இல்லை" என்றார்.